**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கட்சிகளுக்கு நன்கொடை: தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு

**புது தில்லி, நவ. 2:** தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாயிலாக அரசியல் கட்சிகளுக்கு கடந்த செப்டம்பர் 30-ஆம் தேதி வரை கிடைக்கப் பெற்ற நன்கொடை தொடர்பான தரவுகளை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம் தங்களுக்கு கிடைக்கப் பெற்ற நிதி விவரங்களைத் தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்ய அரசியல் கட்சிகளுக்கு கடந்த 2019-இல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவைக் குறிப்பிட்டு, உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

மேலும், தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

தேர்தல் நிதியை ரொக்கமாக அளிப்பதற்கு மாற்றாகவும், அரசியல் கட்சிகள் பெறும் நன்கொடைகளில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தவும் தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2018, ஜனவரி 2-ஆம் தேதி அமல்படுத்தியது. தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் இப்பத்திரங்களைப் பெற்று, அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக அளிக்கலாம்.

'நன்கொடைப் பத்திரங்கள் மூலம் எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் அரசியல் கட்சிகள் பெறலாம்; வெளிநாட்டு நன்கொடைகளும் பெறலாம்' என இத்திட்டம் தொடர்பான சட்டத் திருத்தங்களை விவாதமின்றி நிறைவேற்ற வழிவகுக்கும் பண மசோதாவாக மத்திய அரசு கொண்டுவந்து நிறைவேற்றியது.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

**உச்சநீதிமன்றத்தில் வழக்கு:** 'மத்திய அரசின் இந்த நடவடிக்கை ஜனநாயகத்துக்கு எதிரானது; அரசியல் கட்சிகளுக்கு கட்டுப்பாடின்றியும் வரம்பின்றியும் நிதி கிடைக்க வழிவகுக்கிறது' என்று கூறி தன்னார்வ அமைப்பான ஜனநாயக சீர்திருத்த சங்கம் (ஏடிஆர்) மற்றும் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில், 'இதுவரை தேர்தல் நிதிப் பத்திரங்கள் மூலம் அரசியல் கட்சிகளுக்கு ரூ.12,000 கோடி சென்றுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிதியை ஒரே கட்சி பெற்றுள்ளது' என்று கூறப்பட்டது.

மேலும், மேற்கண்ட சட்டத் திருத்தங்கள் பண மசோதாவாக நிறைவேற்றப்பட்டதால், அதன் செல்லுபடித்தன்மை குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.



**தொடர் விசாரணை:** முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கில், உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு கடந்த திங்கள்கிழமை தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், 'அரசமைப்புச் சட்டப் பிரிவு 19(1)(ஏ) தகவல் அறியும் உரிமையின்படி, நன்கொடைக்கான ஆதாரம் குறித்து அறிய மக்களுக்கு உரிமையில்லை' என்று தெரிவித்தது.

இந்நிலையில், தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பி.ஆர்.கவாய், ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு முன் தொடர்ந்து 3-ஆவது நாளாக வியாழக்கிழமை விசாரணை நடைபெற்றது.

அப்போது, தேர்தல் நிதிப் பத்திரங்கள் வாயிலாக அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கப் பெற்ற நிதி தொடர்பாக புதுப்பிக்கப்பட்ட தரவுகள் தேர்தல் ஆணையத்திடம் உள்ளனவா என்று தேர்தல் ஆணைய வழக்குரைஞரிடம் நீதிபதிகள் கேள்வியெழுப்பினர்.

அதற்கு, '2019, ஏப்ரலில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் சில விவரங்கள் உள்ளன; ஆனால், அவை 2019 வரையிலானவையே' என்று வழக்குரைஞர் பதிலளித்தார்.

**தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு:** இதையடுத்து, '2019, ஏப்ரல் உத்தரவானது, அது பிறப்பிக்கப்பட்ட தேதியை வரம்பாகக் கொண்டதல்ல. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு சந்தேகம் எழுந்தால், விளக்கம் கோரி நீதிமன்றத்தை அணுகியிருக்கலாம். ஆனால், ஒருபோதும் நீதிமன்றத்தை அணுகவில்லை.

தேர்தல் பத்திரங்கள் வாயிலாக அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கப் பெற்ற நிதி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தரவுகள், தேர்தல் ஆணையத்தின்வசம் இருப்பது அவசியம். அந்தத் தரவுகள் தொடர்ந்து சேகரிக்கப்பட்டிருக்க வேண்டும்' என்று நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், கடந்த செப்டம்பர் 30-ஆம் தேதி வரையிலான தரவுகளைத் தொகுத்து, உச்சநீதிமன்றப் பதிவாளரிடம் மூடிய உறையில் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

## 'குறைபாடுகளற்ற, வெளிப்படையான அமைப்பு முறையை உருவாக்க முடியும்'

'தேர்தல் நடைமுறையில் ரொக்கப் பயன்பாட்டைக் குறைப்பது அவசியம்' என்று குறிப்பிட்ட உச்சநீதிமன்றம், தற்போதைய திட்டத்தை போல் இல்லாமல் குறைபாடுகளற்ற, மேலும் வெளிப்படையான அமைப்பு முறையை உருவாக்க நாடாளுமன்றம் மற்றும் அரசு நிர்வாகத்தால் முடியும் என்று கருத்து தெரிவித்தது.

'தங்களுக்கு நன்கொடை அளிப்போர் யாரென அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் கண்டிப்பாக தெரிந்திருக்கும். வாக்காளர்களுக்கு மட்டும்தான் அது தெரியாது. வாக்காளர்களுக்கு அந்த உரிமை கிடையாது என்ற மத்திய அரசின் வாதத்தை ஏற்பது சற்று கடினமாக உள்ளது. அனைத்தையும் ஏன் வெளிப்படையாக்கக் கூடாது?' என்று கேள்வியெழுப்பிய நீதிபதிகள், சில யோசனைகளையும் முன்வைத்தனர்.

'தேர்தல் நடைமுறையில் ரொக்கப் புழக்கத்தைக் குறைக்க வேண்டியது அவசியம். இதற்காக, அங்கீகரிக்கப்பட்ட வங்கி வழிமுறையை மேலும் ஊக்குவிக்க வேண்டும். கூடுதல் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். அதிகார மையங்களுக்கு அதனால் பலனடைவோர் கைம்மாறு செய்வதற்கான வழிமுறையாக தேர்தல் நிதிப் பத்திரங்கள் திட்டம் மாறிவிடக் கூடாது' என்று தெரிவித்த நீதிபதிகள், தற்போதைய அமைப்பு முறையைப் போல் இல்லாமல், குறைபாடுகளற்ற, வெளிப்படையான அமைப்பு முறையை நாடாளுமன்றம் மற்றும் அரசு நிர்வாகத்தால் உருவாக்க முடியும் என்றனர்.

EVA STALIN IAS

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தவிர்க்கக் கூடிய விபத்து!

ஆண்டுதோறும் இந்திய சாலைகளில் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. உலகிலேயே மிக அதிகமான சாலை விபத்துகளும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் இந்தியாவில்தான் காணப்படுகின்றன என்பது வேதனையளிக்கிறது. சர்வதேசத் தரத்திலான சாலைகளும், அதிநவீன மோட்டார் வாகனங்களும் ஒருபுறம் மகிழ்ச்சி அளித்தால், இன்னொருபுறம் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் 2022 ஆண்டுக்கான சாலை விபத்துகள் குறித்த அறிக்கை வெளியாகி இருக்கிறது. மிக அதிகமான சாலை விபத்துகள் தமிழகத்தில் (64,105) நிகழ்ந்திருக்கின்றன என்றால், அதிகமான உயிரிழப்புகளை உத்தர பிரதேச மாநிலம் எதிர்கொண்டது. உத்தர பிரதேசத்தில் 22,595 சாலை விபத்து மரணங்கள் என்றால், அதற்கு அடுத்த இடத்தில் 17,884 பேர் உயிரிழப்புடன் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

கடந்த ஆண்டு மாநிலங்கள், ஒன்றிய பிரதேசங்கள் அனைத்திலுமாக இந்தியாவில் 4.61 லட்சம் சாலை விபத்துகள் பதிவாகி இருக்கின்றன. 1.6 லட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 4.43 லட்சம் பேர் காயமடைந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது விபத்துகள் 11.9%, உயிரிழப்புகள் 9.4%, காயமடைந்தோர் 15.3% என்கிற அளவில் அதிகரித்திருக்கிறது.

2018–இல் 4.7 லட்சத்துக்கும் அதிகமான விபத்துகளில் 1.57 லட்சம் உயிரிழப்புகள் காணப்பட்டன. கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றைத் தொடர்ந்து அமலுக்கு வந்த பொது முடக்கம், பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவை சாலை விபத்துகளை பெருமளவு குறைத்தன. இப்போது மீண்டும் விபத்துகள் அதிகரிக்கத் தொடங்கியிருப்பது கவலையளிக்கிறது.

கடந்த ஆண்டு நடந்த விபத்துகளில் 72.4%–ம், உயிரிழப்புகளில் 75.2%–ம் வேகக் கட்டுப்பாட்டை வாகன ஓட்டிகள் கடைப்பிடிக்காததால் ஏற்பட்டிருப்பதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. சுமார் 50,000 பேர் இரு சக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணியாததால் உயிரிழந்ததாக தெரிவிக்கிறது அந்த அறிக்கை.

இரு சக்கர வாகன விபத்துகளில் பலியானவர்களில் 35,692 பேர் வாகனத்தை ஓட்டியவர்கள் என்றால், 14,337 பேர் பின்னால் அமர்ந்து பயணித்தவர்கள். இரு சக்கர வாகன விபத்து மரணங்களில் 27,605 பேர் இன்னொரு இரு சக்கர வாகனத்தில் மோதியதால் உயிரிழந்தனர். 47,171 மரணங்களுக்கு இரு சக்கர வாகன ஓட்டிகளின் தவறுதான் காரணம் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

EVA STALIN IAS ACADEMY

அமைச்சகம் வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்களில் இருந்து தலைக்கவசம் அணிவதும், சீட் பெல்ட் அணிவதும் எந்த அளவுக்கு முக்கியம் என்பது தெரியவருகிறது. சாலை விதிகளைப் பின்பற்றாமல் இருப்பது, சிவப்பு விளக்கு எரியும்போது பயணிப்பது, வாகனம் ஓட்டும்போது கைப்பேசியைப் பயன்படுத்துவது உள்ளிட்டவை பெரும்பாலான விபத்துகளுக்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. குண்டும் குழியுமான சாலைகளும் இன்னொரு முக்கியமான காரணம்.

சாலை விபத்துகளுக்கு மிக அதிகமான அளவில் இரு சக்கர வாகனங்கள் காரணமாகின்றன. அதற்கு 'ஜிக்' தொழிலாளர்கள் என்று அழைக்கப்படும் ஸ்விகி, ஸொமாட்டோ, டன்சோ உள்ளிட்ட பல்வேறு நுகர்வோர் சேவையில் ஈடுபடும் நிறுவன ஊழியர்கள் முக்கியக் காரணம்.

மிக அதிகமாக இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்தி வீடுகளுக்கு பொருள்களைக் கொண்டுசேர்க்கும் பணியில் ஈடுபடும் இந்த 'ஜிக்' தொழிலாளர்கள் விரைந்து செயல்பட வேண்டி இருப்பதால், சாலை விதிகளை மதிப்பில்லை என்பதுடன் வேகக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்காமல் இருப்பதும் விபத்துகளுக்கு முக்கியக் காரணம். 2020-இல் 68 லட்சமாக இருந்த 'ஜிக்' தொழிலாளர்களின் எண்ணிக்கை, 2030-க்குள் 2.3 கோடியாக அதிகரிக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

சாலை விபத்துகளுக்கு சாலைகளின் அமைப்பும், போக்குவரத்து நடைமுறையும் மிக முக்கியமான காரணம். இந்தியாவைவிட அதிவேகமாக வாகனங்கள் பயணிக்க அனுமதிக்கும் நாடுகளில் உயிரிழப்புகள் மிக மிகக் குறைவு. தவறான சாலைக் கட்டமைப்பு, நாற்சந்திகள் முறையாக அமையாமல் இருப்பது, அறிவிப்புப் பலகைகள் இல்லாமை, சாலை ஆக்கிரமிப்புகள் ஆகியவை வாகன விபத்துகளுக்கு வழிகோலுகின்றன. கால்நடைகள் உள்பட சீராக வாகனங்கள் நகர தடையாக இருப்பவை ஏராளம்.

இரு சக்கர வாகன ஓட்டிகளும், ஆட்டோ ரிக்ஷாக்களும் பெரும்பாலும் சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதில்லை. அவர்களுக்கென்று சாலையின் இடதுபுறமாக தனிப் பாதை அமைத்துக் கொடுக்காமல் இருப்பதும், சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் இருப்பதும் விபத்துக்கான முக்கியக் காரணிகள். அது குறித்து காவல் துறையும் அரசும் கவனம் செலுத்தினால் விபத்துகளின் எண்ணிக்கை ஏறக்குறைய பாதியாகக் குறைந்துவிடும்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மாலத்தீவின் ஆட்சி மாற்றம்!

மாலத்தீவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம், இந்தியாவைப் பொருத்த வரை எதிர்பாராதது மட்டுமல்ல, மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்திய எதிர்ப்பு அரசியல்வாதியும், சீன ஆதரவாளராகக் கருதப்படுபவருமான டாக்டர் முகமது மூயிஸ் அங்கு நடைபெற்ற தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று, அதிபராகப் பொறுப்பேற்கவுள்ளார்.

இனம், மொழி, கலாசாரம், வர்த்தகம் எனப் பல வழிகளில் இந்தியாவுக்கும் மாலத்தீவுகளுக்கும் நெருங்கிய உறவு உண்டு. மாலத்தீவு என்ற பெயரே 'மாலத்வீபம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லின் திரிபுதான். தீவுகளின் மாலை என்று இதற்குப் பொருள். மாலத்தீவின் அதிகாரபூர்வ மொழியான 'திவெஹி', சம்ஸ்கிருதம், பிராகிருதம், தமிழ் ஆகிய இந்திய மொழிகளின் தாக்கம் கொண்டது.

ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திலிருந்து 1965 ஜூலை 26-இல் மாலத்தீவுகள் விடுதலை பெற்றபோது, அந்தத் தீவுக் கூட்டத்தை சுதந்திர நாடாக அங்கீகரித்த முதல் நாடு இந்தியாதான். 1981-இல் இரு நாடுகளிடையே உருவான விரிவான வர்த்தக ஒப்பந்தம், 40 ஆண்டுகளுக்கும் மேலாக இரு நாடுகளின் வர்த்தக நலன்களை மேம்படுத்தியதுடன், இருதரப்பு உறவையும் வலுப்படுத்தியிருக்கிறது.

2004-இல் சுனாமி தாக்குதலின்போது, மாலத்தீவுகளுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பிய முதல் நாடு இந்தியா. கொவைட் தொற்றின்போது, 'வாக்ஸின் மைத்ரி' திட்டத்தில் தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து பெற்ற முதல் நாடும் மாலத்தீவுகள்தான். அந்த அளவுக்கு அந்நாடு இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாகவே இருந்து வந்திருக்கிறது.

1988-இல் மாலத்தீவுகளின் அதிபரான மாமூன் அப்துல் கயூமுக்கு எதிராக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றபோது 'கற்றாழை நடவடிக்கை' என்ற பெயரில் இந்திய ராணுவம் அங்கு 1988 நவ. 3-இல் களமிறங்கியது. அந்த அதிரடி நடவடிக்கையால்தான் அந்நாட்டின் ஜனநாயகம் அப்போது காக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட அப்துல்லா லுதுஃபீ தலைமையிலான கும்பலும், இலங்கையிலிருந்து வரவிக்கப்பட்ட கூலிப்படையினரும் முடக்கப்பட்டனர்.

முகமது மூயிஸின் தற்போதைய வெற்றி, இந்தியா - மாலத்தீவுகள் ஆகிய இரு நாடுகளிடையிலான நல்லுறவைத் தகர்ப்பதாக அமைந்து விடுமோ என்ற அச்சம் எழுந்திருக்கிறது. அவரது சீன ஆதரவு ரகசியமானதல்ல.

முகமது மூயிஸின் இந்திய எதிர்ப்புக் கொள்கைகள், இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் செல்வாக்கிற்கு சவாலையும், பகிசார் அரசியலில் தேவையற்ற சிக்

இது நமது வியூகங்களை மறுபரிசீலனை செய்தாக வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருக்கிறது.


மனீஷ் திவாரி

2010-இல் மாலத்தீவுகளுக்கு கண்காணிப்பு ஹெலிகாப்டர்களை இந்தியா வழங்கியபோது இந்திய எதிர்ப்புப் பிரசாரம் அங்கு தொடங்கியது. மாலத்தீவுகளின் இறையாண்மையில் இந்தியா அத்துமீறித் தலையிடுவதாகவும், அளவுக்கு மீறி இந்தியா மேலாதிக்கம் செலுத்துவதாகவும் அப்துல்லா யாமீன் குற்றஞ்சாட்டினார். அவர் அதிபரான போது இரு நாட்டு உறவு சீர்குலையத் தொடங்கியது. அவரது அரசில் (2013- 2018) அமைச்சராக இருந்த முகமது மூயிஸ்தான் தற்போது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் வரும் நவ. 17-இல் பொறுப்பேற்க உள்ளார்.

2012-இல் இந்தியாவைச் சேர்ந்த ஜிஎம் ஆர் குழுமம், மாலே சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்தி 25 ஆண்டுகளுக்குப் பராமரிக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றபோது, அதற்கு எதிரான அரசியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 511 மில்லியன் டாலர் (தற்போதைய இந்திய மதிப்பில் ரூ. 4,250 கோடி) மதிப்

**இனம், மொழி, கலாசாரம், வர்த்தகம் எனப் பல வழிகளில் இந்தியாவுக்கும் மாலத்தீவுகளுக்கும் நெருங்கிய உறவு உண்டு. மாலத்தீவு என்ற பெயரே 'மாலத்வீபம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லின் திரிபுதான்.**

புள்ள அந்தப் பணி, சர்வதேச விதிமுறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஜிஎம் ஆர் நிறுவனத்தால் பெறப்பட்டது.

ஆனால், விமானப் பயணிகளிடம் விமான நிலைய மேம்பாட்டுக்காகவும் பயணிகளின் காப்பீட்டுக்காகவும் 25 டாலர் கட்டணமாகப் பெறப்பட்டதை பெரிய குற்றமாகப் பிரசாரம் செய்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடையாணை பெற்றனர். அந்த வழக்கு சர்வதேச தீர்ப்பாயத்தில் இருக்கும்போதே ஜிஎம்ஆருடனான பணி ஒப்பந்தத்தை ரத்து செய்தது அந்நாட்டு அரசு.

2013-இல் அப்துல்லா யாமீன் அதிபரானதும், இந்தியாவுக்கு எதிரான வெறுப்புணர்வுப் பிரசாரம் வரிசை கட்டியது. இஸ்லாமிய மத அடிப்படைவாத உணர்வையும், மாலத்தீவு தேசிய வெறியையும் தூண்டிவிட்டு, இந்தியாவுக்கு எதிரான சிந்தனையைப் பெரிதுபடுத்தினார் யாமீன். அப்போது, சீனாவின் ஆதிக்கம் அங்கு பரவத் தொடங்கியது.

2018-இல் இப்ராஹிம் முகமது சோலி அதிபரானவுடன், இந்தியாவுக்கு விரோதமான கொள்கைகளை மாற்றி அமைக்

சரிப்படுத்தினார். மாலத்தீவுகளின் நலனில் மீண்டும் இந்தியாவுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இரு நாடுகளிடையிலான பொருளாதார, ராணுவ ஒத்துழைப்பு வலுப்பெற்றது. தவிர, இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் பெருகுவதைத் தடுப்பதிலும் மாலத்தீவுகள் அரசின் இந்த மாற்றம் உதவிகரமாக இருந்தது.

ஆனால், இதற்கு எதிராக உள்நாட்டு அரசியலில் மீண்டும் இந்திய எதிர்ப்பு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அந்நாட்டின் மக்கள் தேசியக் கட்சி (தற்போது அதிபராகத் தேர்வாகியுள்ள முகமது மூயிஸின் கட்சி), மாலத்தீவுகள் முற்போக்குக் கட்சி ஆகியவை இணைந்து உருவாக்கிய எதிர்க்கட்சிகளின் கூட்டணி 'இந்தியாவே வெளியேறு' என்ற பிரசார இயக்கத்தை தொடர்ந்து நடத்தியது.

அந்தப் பிரசார இயக்கத்தின் நோக்கம், மாலத்தீவுகளில் பணி அமர்த்தப்பட்டுள்ள இந்திய ராணுவத்தை வெளியேற்றுவதுதான். இதில் வேடிக்கை என்னவென்றால், அந்நாட்டிலுள்ள இந்திய ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 75 மட்டுமே.

மாலத்தீவுகளுக்கு இந்தியா பரிசாக வழங்கிய டோர்னியர் விமானத்தையும் இரு கண்காணிப்பு ஹெலிகாப்டர்களையும் இயக்குவதில் மாலத்தீவு ராணுவத்திற்கு உதவவே அவர்கள் அங்கு உள்ளனர்.

மாலத்தீவுகள் நாட்டின் மக்கள் பழமைவாதிகள். அந்த நாட்டின் அரசாங்க மதமாக இஸ்லாம் உள்ளது. எனவே, இந்தியாவிலிருந்து வெளிவரும், ஹிந்துக்களுக்கு ஆதரவான, இஸ்லாமியர்களுக்கு எதிரான செய்திகளை அந்நாட்டு எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. மக்களை இந்திய எதிர்ப்பின் அடிப்படையில் மத ரீதியாகத் தூண்டிவிட்டதால் மட்டுமே எதிர்க்கட்சிகள் தற்போதைய தேர்தலில் வென்றுள்ளன.

ஆசியாவையும் ஐரோப்பாவையும் கடல்வழியில் இணைக்கும் கடல் வர்த்தகப் பாதை (எஸ்எல்ஓசி) இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானதாகும். தென்சீனக் கடலிலிருந்து இந்தியப் பெருங்கடலின் வடபகுதி மீது சீன கடற்படையின் செல்வாக்கு பரவலைத் தடுக்கும் தாங்குதளமாக மாலத்தீவுகள் இருக்க வல்லவை.

வியூக ரீதியாகவும், கடல் வர்த்தகப் பாதை வழியிலும் இன்றியமையாதது.

ஏற்கெனவே, பாகிஸ்தானின் குவாதரிலும், இலங்கையின் அம்பாந்தோட்டையிலும் துறைமுகங்களை நிர்மாணித்தல் என்ற பெயரில் சீனா ஊடுருவி விட்டது. மாலத்தீவுகளிலும் சீன ஆதரவு அரசு அமைவது அந்நாட்டின் ராணுவ ஆதிக்கம் இந்தியாவைச் சுற்றிலும் பெருகவாய்ப்பளித்துவிடும்.

இது நமது பாதுகாப்பு எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எதிரிகள் நுழையக் கூடாது என்ற மன்றோ அணுகுமுறைக் கோட்பாட்டை கேள்விக்குறியாக்கிவிடும் (மன்றோ கோட்பாடு என்பது ஐரோப்பாவுக்குக் கடிவாளமிடும் வகையிலான, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் முக்கியமான கருதுகோளாகும்).

தான் அதிபரானால், ஊழல் வழக்கில் 11 ஆண்டு தண்டனை பெற்று சிறையிலிருக்கும் அப்துல்லா யாமீனை விடுவிப்பேன் என்று முகமது மூயிஸ் தேர்தலின்போது அறிவித்திருந்தார். அதுபோலவே, தேர்தல் வெற்றி குறித்த தகவல் கிடைத்தவுடன், தற்போதைய அதிபர் முகமது சோலியை வலியுறுத்தி, அப்துல்லா யாமீனை சிறையிலிருந்து விடுவித்திருக்கிறார். யாமீன் தற்போது சிறைக்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

சன்னி இஸ்லாமியர்களிடையே பிரபலமான சீர்திருத்தவாத இயக்கமான சலாபியிஸம் மாலத்தீவுகளில் மிகுந்த செல்வாக்கு செலுத்தி வருகிறது. இது இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெருவாரியாகப் பின்பற்றப்படும் தாராளமயமான தேவ்பந்தி இஸ்லாமுடனும், இந்திய துணைக்கண்டத்தில் தனித்துவமான இஸ்லாம் நெறிமுறைகளை வடிவமைத்த சூஃபியிஸத்துடனும் முரணான பார்வையைக் கொண்டிருக்கிறது சலாபியிஸம். இதனை தீவிரமாகப் பின்பற்றுபவர்தான் முகமது மூயிஸ்.

இவை அனைத்தையும்விட கவலைக்குரியது, மாலத்தீவுகளில் பெருகிவரும் மத அடிப்படைவாதமும், இஸ்லாமிய தீவிரப் போக்கும்தான். அல்-காய்தா, ஐஎஸ்ஐஎஸ் ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கு பிற நாடுகளிலிருந்து போராளிகளை அதிக அளவில் அனுப்பிய நாடாக மாலத்தீவுகள் மாறியுள்ளது.

எனவே, வரும் நாள்களில் மாலத்தீவுகள் விஷயத்தில் இந்தியா நிதானமாகவும் சிந்தித்தும் செயல்பட வேண்டியிருக்கும். அண்டை நாடான மாலத்தீவுகளில் பெருகிவரும் மத அடிப்படைவாதம் நிச்சயமாக இந்தியாவுக்கு நல்லதல்ல. எனவே, மாலத்தீவுகளுடனான நமது வியூகங்களை ஆழ்ந்து மறுபரிசீலனை செய்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

கட்டுரையாளர்:

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**



# இந்தியா சாதனை வெற்றி; முதல் அணியாக அரையிறுதிக்கு தகுதி

## ஷமி, சிராஜ் வேகத்தில் சரிந்தது இலங்கை

முகமது ஷமி 5/18

முகமது சிராஜ் 3/16

மும்பை, நவ. 2: உலகக் கோப்பை கிரிக்கெட்டின் 33-ஆவது ஆட்டத்தில் இந்தியா 302 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கையை வியாழக்கிழமை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இதன் மூலம், ஒருநாள் உலகக் கோப்பை போட்டிகளில் தனது அதிகபட்ச ரன் வித்தியாசத்திலான வெற்றியை பதிவு செய்து சாதனை படைத்தது.

இதையடுத்து முதல் அணியாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றது இந்தியா. மறுபுறம், 55 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 5-ஆவது தோல்வியை சந்தித்த இலங்கை, போட்டியிலிருந்து வெளியேறும் விளிம்பு நிலையில் இருக்கிறது.

இந்த ஆட்டத்தில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி அதிரடியாக பௌலிங் செய்து 5 விக்கெட்டுகளை சாய்த்ததுடன், பல சாதனைகள் புரிந்தார். முன்னதாக பேட்டிங்கில், ஷுப்மன் கில், விராட் கோலி, ஷ்ரேயஸ் ஐயர் அதிரடி காட்டினர்.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இலங்கை, ஃபீல்டிங்கை தேர்வு செய்தது. இந்திய இன்னிங்ஸில் கேப்டன் ரோஹித் சர்மா 4 ரன்களுக்கு ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். 2-ஆவது விக்கெட்டுக்கு இணைந்த ஷுப்மன் கில் - விராட் கோலி கூட்டணி, 193 ரன்கள் சேர்த்தது.

சதத்தை நெருங்கிய கில், 11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 92 ரன்களுக்கு வீழ்ந்தார். அடுத்த 2 ஓவர்களில் கோலியும் 11 பவுண்டரிகளுடன் 88 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார். மிடில் ஆர்டரில் வந்த ஷ்ரேயஸ் ஐயர் அதிரடியாக 56 பந்துகளில் 3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உள்பட 82 ரன்கள் விளாசி அணியின் ஸ்கோரை மேலும் அதிகரித்து வெளியேறினார்.

எஞ்சியோரில் கே.எல்.ராகுல் 2 பவுண்டரிகளுடன் 21, சூர்யகுமார் யாதவ் 2 பவுண்டரிகளுடன் 12, முகமது ஷமி 2 ரன்களுக்கு விக்கெட்டை இழக்க, ரவீந்திர ஜடேஜா 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 35 ரன்களுக்கு இன்னிங்ஸின் கடைசி பந்தில் ஆட்டமிழந்தார். இலங்கை தரப்பில் தில்ஷன் மதுஷங்கா 5, துஷ்மந்தா சமீரா 1 விக்கெட் எடுத்தனர்.

பின்னர் இலங்கை தனது இன்னிங்ஸில் தொடக்க நிலையிலேயே வரிசையாக விக்கெட்டுகளை இழந்தது. 0 ரன்னுக்கு 1, 2 ரன்களுக்கு 2, 3 ரன்களுக்கு 4, 14 ரன்களுக்கு 6, பின்னர் 22 ரன்களுக்கு 7, 29 ரன்களுக்கு 8 என இலங்கை பேட்டர்கள் நிலையில்லாமல் வெளியேறினர்.

பதும் நிசங்கா, திமுத் கருணாரத்னே, சதீரா சமரவிக்ரமா, துஷன் ஹேமந்தா, துஷ்மந்தா சமீரா என 5 பேர் டக் அவுட்டாகினர். கேப்டன் குசல் மெண்டிஸ் (1), சரித் அசலங்கா (1), தில்ஷன் மதுஷங்கா (5) ஆகியோர் ஒற்றை இலக்க ரன்னில் வெளியேற, காசன் ரஜிதா 2 பவுண்டரிகளுடன் 14, ஏஞ்ஜெலோ மேத்யூஸ் 1 பவுண்டரியுடன் 12 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர். இந்திய பௌலிங்கில் முகமது ஷமி 5, முகமது சிராஜ் 3, ஜஸ்பிரீத் பும்ரா, ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

**45** இந்த ஆட்டத்தின் மூலம், உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக அதிக விக்கெட்டுகள் (45) சாய்த்தவர் என்ற சாதனையை முகமது ஷமி படைத்தார். முன்னதாக ஜாஹீர் கான், ஜவகல் ஸ்ரீநாத் ஆகியோர் தலா 44 விக்கெட்டுகள் சாய்த்ததே அதிகபட்சமாக இருந்தது.

**302** ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் 302 ரன்கள் வித்தியாசத்திலான இந்த வெற்றியே, இந்தியாவின் அதிகபட்சமாகும். இதற்கு முன் 2007 எடிஷனில் பெர்முடா அணிக்கு எதிராக 257 ரன்கள் வித்தியாசத்தில் வென்றதே இந்தியாவின் அதிகபட்சமாக இருந்தது. ஒருநாள் ஃபார்மட்டில் இந்தியாவின் அதிகபட்ச வெற்றியும் (317 ரன்கள்) இலங்கைக்கு எதிராகவே பதிவு செய்யப்பட்டுள்ளது (2023 ஜனவரி).

**106** இந்த ஆட்டத்தில் ஷ்ரேயஸ் ஐயர் விளாசிய ஒரு சிக்ஸர் 106 மீட்டர் தொலைவுக்கு சென்றது. நடப்பு உலகக் கோப்பை போட்டியில் இதுவே அதிக தொலைவான சிக்ஸராகும்.

**5** இந்த ஆட்டத்தில் 5 விக்கெட்டுகள் சாய்த்த முகமது ஷமி, ஒருநாள் உலகக் கோப்பை போட்டியில் அதிகமுறை (3) அத்தனை விக்கெட்டுகள் வீழ்த்தியவராக ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்குடன் இணைந்திருக்கிறார். அதேபோல், ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக அதிகமுறை 5 விக்கெட்டுகள் சாய்த்தவர் ஆனார் ஷமி (4 முறை). முன்னதாக அந்த இடத்தில் ஜவகல் ஸ்ரீநாத், ஹர்பஜன் சிங் இருந்தனர் (தலா 3 முறை).

### சுருக்கமான ஸ்கோர்

**இந்தியா**
**357/8** (50 ஓவர்கள்)

| | |
|---|---|
| ஷுப்மன் கில் | 92 |
| விராட் கோலி | 88 |
| ஷ்ரேயஸ் ஐயர் | 82 |
| **பந்துவீச்சு** | |
| தில்ஷன் மதுஷங்கா | 5/80 |
| துஷ்மந்தா சமீரா | 1/71 |
| ஏஞ்ஜெலோ மேத்யூஸ் | 0/11 |

**இலங்கை**
**55/10** (19.4 ஓவர்கள்)

| | |
|---|---|
| காசன் ரஜிதா | 14 |
| ஏஞ்ஜெலோ மேத்யூஸ் | 12 |
| மஹீஷ் தீக்ஷனா | 12* |
| **பந்துவீச்சு** | |
| முகமது ஷமி | 5/18 |
| முகமது சிராஜ் | 3/16 |
| ரவீந்திர ஜடேஜா | 1/4 |

### புள்ளிகள் பட்டியல்

இந்தியா-இலங்கை ஆட்டம் (33) வரை

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 7 | 7 | 0 | 14 | 2.102 |
| தென்னாப்பிரிக்கா | 7 | 6 | 1 | 12 | 2.290 |
| ஆஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 | 0.970 |
| நியூஸிலாந்து | 7 | 4 | 3 | 8 | 0.484 |
| பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 6 | -0.024 |
| ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 6 | -0.718 |
| இலங்கை | 7 | 2 | 5 | 4 | -1.162 |
| நெதர்லாந்து | 6 | 2 | 4 | 4 | -1.277 |
| வங்கதேசம் | 7 | 1 | 6 | 2 | -1.446 |
| இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 | -1.652 |



EVA STALIN IAS